# போர்க்காலப் படைவீரர்களுக்கு $1,600 அடிப்படை மாத ஊதியம்

போர்க்காலப் படை நடவடிக்கைகளின்போது ஏற்பட்ட வருமான இழப்பிற்காக தயார்நிலை தேசிய சேவையாளர்களில் சிலரே கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்கும். அவர்களுக்கான ஈடுசெய் ஊதியம் தானாகவே செலுத்தப்பட்டுவிடும். பதவி, பிரிவு வேறுபாடின்றி அவர்களுக்குப் புதிய அடிப்படை மாத ஊதியமாக $1,600 வழங்கப்படும்.

இவ்வாண்டின் பிற்பாதியில் இருந்து, ஈடுசெய் ஊதியத் தொகையைத் தானாகவே கணக்கிடும் வகையில், சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையத்திடம் இருந்தும் மத்திய சேமநிதிக் கழகத்திடம் இருந்தும் தற்காப்பு அமைச்சு தரவுகளைப் பெறத் தொடங்கும்.

அத்தொகை வழங்கப்படுமுன், தேசிய சேவையாளர்களும் நிறுவனங்களும் அதுகுறித்து மறுஆய்வு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுவர். மீண்டும் கணக்கிட விரும்பினால் அவர்கள் கூடுதல் ஆவணங்களை வழங்க வேண்டும்.

இதன்மூலம் 100,000க்கும் மேற்பட்ட தேசிய சேவையாளர்களும் 25,000 நிறுவனங்களும் பயனடைவர்.

தேசிய சேவை அனுபவத்தை மேம்படுத்துவதற்காகத் தற்காப்பு அமைச்சு நேற்று பல புதிய திட்டங்களை நாடாளுமன்றத்தில் வெளியிட்டது. தற்காப்பு மூத்த துணை அமைச்சர்களான ஹெங் சீ ஹாவும் ஸாக்கி முகம்மதும் அவற்றை அறிவித்தனர்.

அதன்படி, மூன்று முக்கிய மைல்கற்களை எட்டும் தேசிய சேவையாளர்களுக்கு இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து கூடுதலாக $2,000 ரொக்க உதவித்தொகை வழங்கப்படும்.

முழு நேர தேசிய சேவையை முடித்ததற்காக 1,000 வெள்ளியும் போர்க்காலப் படை நடவடிக்கைகளின் நடுப்பகுதியில் இருக்கும்போது 500 வெள்ளியும் போர்க்காலப் படை நடவடிக்கைகளை முழுமையாக முடித்தபின் 500 வெள்ளியும் வழங்கப்படும்.

இந்த உதவித்தொகைகள் 'லைஃப்எஸ்ஜி கிரெடிட்' முறையில் வழங்கப்படும். 'பேநவ் கியூஆர்' வழியாக 'ஸ்கேன் அண்ட் பே' முறையிலும் 'நெட்ஸ் கியூஆர்' முறையிலும் பணம் பெற்றுக்கொள்ளும் இவற்றை இணைய, நேரடிக் கடைகளில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

தேசிய சேவையாற்றும்போதே பட்டக் கல்வி பயிலவும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் முழு நேர தேசிய சேவையில் புதிதாகச் சேருவோர், வேலை-கற்றல் திட்டத்தின் மூலமாக கணினி அறிவியல், கணினிப் பொறியியல், அல்லது தரவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் இளநிலை பட்டக் கல்வி பயில முடியும்.

இதற்கான தேர்வுச் செயல்முறை கடுமையானதாக இருக்கும் என்றும் தேசிய சேவையில் சேர்வதற்கு ஓராண்டுக்கு முன்பே அது தொடங்கும் என்றும் தற்காப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வரும் 2025ஆம் ஆண்டில் இருந்து, கிட்டத்தட்ட 500 முழு நேர தேசிய சேவையாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பதிவுசெய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஆண்டில் இருந்து தற்காப்பு மற்றும் உள்துறை அமைச்சு சேவையாளர்களுக்கான விபத்துக் காப்புறுதி $150,000ல் இருந்து $300,000ஆக உயர்த்தப்படும்.

பருவநிலை மாற்றம் காரணமாக சுற்றுப்புற வெப்பநிலை உயர்ந்து வருவதால் தேசிய சேவையாளர்களின் உடல்நலம் பாதிக்கப்படலாம். இதனையடுத்து, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் புதிய வெப்ப மீட்சி, செயல்திறன் நிலையம் அமைக்கப்பட இருக்கிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.